## ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

**2019** ம் ஆண்டு **ஆகஸ்ட்** மாதம் **20** ம் நாள் செவ்வாய் கிழமை பிற்பகல் **4.00** மணியளவில் நடைபெற்ற **சாதாரணக்** கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :- திரு. கா. சுப்பையா,**
**தனி அதிகாரி.**

**பொருள் எண் : 213**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2019-20 ம் ஆண்டிற்கு வருடாந்திர பங்குத் தொகை ரூ.50000/- செலுத்தப்பட வேண்டியுள்ளது என நிறுவன இயக்குநர் அவர்களின் 28.02.2019 ம் தேதிய ந.க.எண் 648/2019/A2 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2019-20 ம் ஆண்டிற்கு வருடாந்திர பங்குத் தொகை ரூ.50000/- செலுத்த அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந. க. எண் C 1/5494 / 2002**

**பொருள் எண் : 214**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு- திடக்கழிவு மேலாண்மை பணிகளை, 189 துப்புரவு பணியாளர்களை கொண்டு Out Source மூலம் பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோர, நாளிதழ்களில் பிரசுரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.125000/- க்கு மன்ற முன் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச் செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந. க. எண் 2424/2018/H1**

**பொருள் எண் : 215**

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2016-2020 நகராட்சி பணியாளர்களுக்கு செயல்படுத்த அரசாணை எண் 202 நிதித்துறை ( ஊதியம் ) நாள் 30.06.2016 ல் உத்திரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீட்டு திட்டம் வழங்க யுனைடெட் இந்தியா நிறுவனத்திற்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் ஜீலை மாதம் முதல் ஜீன் மாதம் முடிய ரூ.2100/ மற்றும் அதற்கான சேவை வரி சேர்த்து உத்திரவிடப்பட்டுள்ளது. பணியாளர்களிடமிருந்து மாதம் ரூ.180/ சந்தாத் தொகை பிடித்தம் செய்யவும் மீதமுள்ள தொகை நகராட்சி நிதியில் இருந்து செலுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைப்படி 01.07.2019 முதல் 30.06.2019 வரை கீழ்கண்ட தொகைகள் அரசுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| காலம் | பணியாளர் எண்ணிக்கை | காப்பீட்டு நிறுவனத்திற்கு அரசு தலைப்பில் செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ. | பணியாளர் களிடம் பிடித்தம் செய்யப்படும் சந்தா தொகை ரூ. | நகராட்சி நிதியில் இருந்து செலுத்தப்பட வேண்டிய மீத தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01.07.2019 முதல் 30.06.2020 வரை | 175 ( முழு ஆண்டு ) x 2478 | 433650 | 378000 | 55650 |
| | 1 ( 9 மாதம் ) x 2478 x 9/12 | 1859 | 1620 | 239 |
| | 1 ( 8 மாதம் ) x 2478 x 8/12 | 1652 | 1440 | 212 |
| | 1 ( 7 மாதம் ) x 2478 x 7/12 | 1446 | 1260 | 186 |
| | | **438607** | **382320** | **56287** |

எனவே மேற்கண்ட விவரப்படி நகராட்சி நிதியில் இருந்து செலுத்தப்பட வேண்டிய மீத தொகை 01.07.2019 முதல் 30.06.2020 வரையான காலத்திற்கு ரூ.56287 செலுத்தவும், மற்றும் சந்தாத் தொகை ரூ.382320/- ஐ அரசாணைப்படி முதலில் நகராட்சி நிதியில் இருந்து செலுத்தி பின்னர் பணியாளர்களிடம் இருந்து பிடித்தம் செய்யவும் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந. க. எண் 7374/2017/C1**

**பொருள் எண் : 216**

*சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம்* ந.க.எண் 15415/2013/ *குவ* 1, *நாள்* 12.07.2019 *ல் நகராட்சி பகுதியில் மழை நீர் சேமிப்பு திட்டத்தினை துரிதப்படுத்தி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மழை நீர் சேமிப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மழைநீர் சேகரிப்பு நோட்டீஸ், பிளக்ஸ் போர்டு ஆகியவை அச்சு செய்யவும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தாத கட்டிடங்கள் மற்றும் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு பழுதடைந்துள்ள கட்டிடங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு வழங்க அறிவிப்பு படிவங்கள் அச்சடிக்கவும் வேண்டியது அவசியம் ஆகும்.*

| | | |
|---|---|---|
| 1 | *மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு புதிதாக ஏற்படுத்த அறிவிப்பு* | 5000 எண்ணம் |
| 2 | *மழைநீர் சேகரிப்பு ஏற்கனவே உள்ளதை புணரமைப்பு செய்ய அறிவிப்பு* | 5000 எண்ணம் |
| 3 | *மழைநீர் சேகரிப்பு புதிதாக அமைப்பதற்கான ஸ்டிக்கர்* | 5000 எண்ணம் |
| 4 | *மழைநீர் சேகரிப்பு புதிதாக அமைக்கப்பட்டதற்கான ஸ்டிக்கர்* | 5000 எண்ணம் |
| 5 | *மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு விளம்பர பலகை* | 5 *எண்ணம்* |

*எனவே மேற்கண்டவாறு அச்சுப் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ.*70000/ *க்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.*

***அலுவலகக்குறிப்பு :-*** *மன்றம் அனுமதிக்கலாம்.*

***ந. க. எண் 3961/2019/F1***

## ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

**2019** ம் ஆண்டு **ஆகஸ்ட்** மாதம் **30** ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் **4.00** மணியளவில் நடைபெற்ற **சாதாரணக்** கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :- திரு. கா. சுப்பையா,**
**தனி அதிகாரி.**

**பொருள் எண் : 217**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2019 ம் தேதிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 218**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகளில் பேருந்து நிலையத்தினுள் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள படிக்கட்டும் சின்னக்கடை வீதியிலிருந்து பேருந்து நிலையம் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டு ஆகிய இரண்டும் சேதமடைந்து பொது மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதால் அதை உடனடியாக இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக படிக்கட்டுகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**3.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந. க. எண் 4582/2019/E1**

**பொருள் எண் : 219**

ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S.No. 317/2018 திரு. செந்தில்வேல், என்பவர் நடைபாதை தொடர்பாக திரு. சாந்தகுமார் மீது தொடர்ந்துள்ள வழக்கில் நகராட்சி ஆணையாளரை 2 வது பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கும், வழக்கிற்கு ஆகும் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந. க. எண் 7213/2018/F1**

**பொருள் எண் : 220**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி 75373 ஆகும். நகரின் மொத்த பரப்பளவு 5.718 ச. கி.மீ கொண்டது. இதில் 56.825 கி.மீ நீளத்திற்கு சாலைகள் கொண்ட 33 வார்டுகள் அடங்கிய நகராட்சியாகும். ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு ஈப்பு வாகன எண் TN 67 K 5862 மகேந்திரா பொலிரோ ஒரு ஈப்பு வாகனம் மட்டும் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி வாகனம் 2007 ம் ஆண்டில் வாங்கப்பட்டது. மேற்படி வாகனத்தை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர் ஆகிய அலுவலகங்களில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்கள், நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி பணிகள் மற்றும் தினசரி மேற்கொள்ளப்படும் சுகாதாரப்பணிகள் குடிநீர் விநியோக பணிகள் ஆகியவற்றிற்கு ஆணையாளர், பொறியாளர், நகர் நல அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகிய அலுவலர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அலுவலகங்களில் ஒரே நேரத்தில் ஆய்வு கூட்டங்கள் நடைபெறும் பட்சத்தில் அதில் கலந்து கொள்ள பொறியாளர் மற்றும் ஏனைய அலுவலர்கள் பயன்படுத்த வாகனம் இல்லாத நிலை ஏற்படுகிறது. மேலும் வாசு தேவநல்லூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தாமிரபரணி குடிநீர் தினசரி விநியோகத்தை கண்காணிக்கவும், உள்ளூர் குடிநீர் திட்டத்தின் கீழ் நகரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ள செண்பகதோப்பில் செயல்பட்டு வரும் குடிநீர் தலைமையிடத்தை பார்வையிடுவதற்கும் மேற்படி ஈப்பு வாகனத்தை பயன்படுத்தும் நிலை உள்ளது. எனவே குடிநீர் விநியோக பணிகளுக்கும் மற்றும் அதன் தொடர்புடைய ஆய்வு கூட்டங்களில் பிற அலுவலர்கள் கலந்து கொள்ள தற்போதுள்ள ஈப்பு வாகனத்தை பிற அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்து, ஆணையருக்கென புதிய MAHINDRA & MAHINDRA Scorpio S II 2WD 14 BHP BS4 வாகனம் ( Special Government price / Governement E-Market place ) அல்லது அரசு சிறப்பு விலை விகிதத்தின்படி வாங்கவும், புதிய வாகனம் பதிவு செய்தல், வாகன காப்பீடு கட்டணம் சாலை வரி கட்டணம் போன்ற கட்டணங்கள் உள்ளடக்கிய ஒரு புதிய வாகனம் வாங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.20,00,000/- ( இருபது இலட்சம் மட்டும்) பொது நிதியின் கீழ் வாங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந. க. எண் 5060/2019/E1**

**பொருள் எண் : 221**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர் உப விதிகள் 2011 ல் திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் கட்டணம் முறையே வீட்டு உபயோகத்திற்கு ரூ.50/- வீட்டு உபயோகம் அல்லாத தொழிற்சாலைகளுக்கு ரூ.100/-

வியாபார ரீதியில் உள்ள வணிக நிறுவனங்களுக்கு ரூ.120/- என தற்போது வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த காலங்களில் இருமுறை மின்கட்டணம் உயர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களின் கடித எண் Water Charges / BA 2018-6, Date 21.06.2018 ன் படி 01.12.2017 முதல் வாசுதேவநல்லூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் 1000 லிட்டருக்கு நகர்புறத்திற்கு ரூ.9.00 என இருந்துள்ள கட்டணத்தை ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் உயர்வு செய்து செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2019 ல் 1000 லிட்டருக்கு ரூ.9.92 என கணக்கீட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் நகராட்சியால் செலுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு குடிநீர் விநியோகத்திற்காகவும் பராமரிப்பிற்காகவும் கூடுதல் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் நகராட்சிக்கு கூடுதல் நிதி சுமை ஏற்படுகிறது. மேற்படி கூடுதல் செலவினத்தை வேறு வருவாய்கள் மூலம் ஈடு செய்ய வழிகள் இல்லை என்பதால் நகராட்சியில் தற்போது வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணத்தை உயர்த்தி கூடுதல் செலவினத்தை சமன் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதன்படி கீழ்வரும் அட்டவணையில் கண்டுள்ளவாறு குடிநீர் கட்டணங்களை திருத்தியமைக்கவும், குடிநீர் கட்டணங்களை திருத்தியமைப்பதை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், விளம்பர செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | **தற்போது அமுலில் உள்ள குடிநீர் கட்டணம் மற்றும் வைப்பு தொகை** | | | **உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தியமைக்கும் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்பு தொகை** | | |
|---|---|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படும் வகை மற்றும் அளவுமானி முறை விகிதம் | ஒரு மாதத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் (ரூபாய்) | வைப்பு தொகை | அளவு மானி முறை விகிதம் | ஒரு மாதத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் ரூபாய் | வைப்பு தொகை |
| | 1 | 2 | | 1 | 2 | |
| | குடிநீர் விநியோக துணை விதி 9 (A) | | | | | |
| | 1) வீட்டு உபயோகம் ரூ.5/1000 லிட்டர் முடிய | 50/- | Rs.5000 | Rs.100 | Rs.100 | Rs.5000 |
| | 2) வீட்டு உபயோகம் அல்லாதது | | | | | |
| | அ) தொழிற்சாலைகளுக்கு ரூ.10/1000 லிட்டர் முடிய | 100/- | Rs.10000 | Rs.300 | Rs.300 | Rs.15000 |
| | ஆ) வியாபார ரீதியில் உள்ள நிறுவனங்களுக்கு ரூ.12/1000 லிட்டர் முடிய | 120/- | Rs.10000 | Rs.350 | Rs.350 | Rs.25000 |

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந. க. எண் 5127/2019/E2**

**பொருள் எண் : 222**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் அடுப்பில் உள்ள நீராவி பாய்லரில்வ வெடிப்படைந்த தகடு மற்றும் குழாயினை மாற்றி பொருத்தி கொடுக்கும் பணிக்கு தகுதி வாய்ந்த உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து 28.08.2019 அன்று கோரப்பட்டது. கீழ்வரும் அட்டவணையில் கண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ரமேஷ்,<br>இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்,<br>108 E, திருவள்ளுவர் நகர் மதுரை ரோடு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 10000/- |

| | | |
|---|---|---|
| 2 | ஜோதிலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ்,<br>இந்திரா நகர் மதுரை ரோடு டிராக்டர் ஷோரூம் பின்புறம்,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 11000/- |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தந்துள்ள ரமேஷ் இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ், 108 E, திருவள்ளுவர் நகர் மதுரை ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந. க. எண் 5046/2019/E1**

**பொருள் எண் : 223**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 67 K 1273 க்கு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.14,000/- க்கு மன்ற பொருள் அனுமதிக்கு.

**வேலைகளின் விபரம்**

1) ஹைட்ராலிக் ஜாக்கி 3 எண்ணம்.
2) ஆயில் சீல் மாற்றுதல்.

**அலுவலகக்குறிப்பு :-**
1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 4999/2019/H1**

**பொருள் எண் : 224**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட 10 இடங்களில் வறட்சி நிவாரண திட்டம் 2019 ன் கீழ் மின் மோட்டார் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது பணி முடிவடைந்தது. மேற்கண்ட 10 இடங்களில் மின் மோட்டார் பொருத்தும் ம்ணிக்கு மதிப்பீடு தொகை 3.00 இலட்சம் ஆகும். தற்போது வறட்சி மிகுந்து காணப்பட்டதால் மதிப்பீட்டில் உள்ள மெட்டீரியல்கள் மதிப்பீட்டை விட சற்று அதிகமாக பயன்படுத்த பட வேண்டி இருந்ததால் தற்போது வறட்சியை சமாளிக்க ஏதுவாகவும் குடிநீர் அரசு அவசியத்தை கருத்தில் கொண்டும் மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட்டதால் ஒவ்வொரு பணிக்கும் மொத்தம் 10 பணிக்கும் சேர்த்து ரூ.50,000/ அதிக செலவினம் ஏற்பட்டுள்ளது. கூடுதல் செலவினம் ரூ.50,000/ ( ஐம்பதாயிரத்தை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து ஒப்பந்தகாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 225**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி இராமகிருஷ்ணாபுரம் பாராபுள்ளி பாலம் அருகில் உள்ள பழுதடைந்த குழாய்க்கு பதிலாக புதியதாக 350 mm Ms pipe 10 m நீளத்திற்கு அமைக்கும் பணிக்கு ரூ.90,000/ மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 190 நாள் 26.07.2019 ல் அனுமதிக்கப்பட்டது. மேற்படி பணிக்கு 16.08.2019 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு. எம்.கே. ஜின்னா, ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.72% குறைவு |
| 2 | திரு. ஜி. வெங்கடேசன், ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 1.18% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான விலை விகிதம் தந்துள்ள திரு. எம்.கே. ஜின்னா, என்ற ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
ந.க.எண் ( 4498/2019/E2)

**பொருள் எண் : 226**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி திரு.வி.க. மேல்நிலைப்பள்ளியில் RO WATER PLANT அமைக்கும் பணி ரூ.2.50 ( ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19 ன் கீழ் மேற்கொள்வதற்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. சி 3/2970/2018, Date: 29.07.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட

ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.சி 3/2970/2018, Date: 29.07.2019 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண் 6134/2018/E1

**பொருள் எண் : 227**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கூடுதல் கட்டணம் வசூலித்ததாகவும் மேலும் முறையான பராமரிப்பின்றி உள்ளதாகவும் புகார் தெரிவித்து மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூரில் CC No 11/2019 என்ற எண்ணின்படி திரு. VVS. சுந்தரம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தும் பொருட்டு வழக்கறிஞர் திரு. எஸ். சௌந்திரராஜன் என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.2500/ செலுத்த மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 659/2019/A2

**பொருள் எண் : 228**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் மழைநீர் சேகரிப்பு-ஸ்டிக்கர், நோட்டீஸ் அச்சடித்து தருவதற்கு விலைப்புள்ளிகள் 27.08.2019 ம் தேதி கோரப்பட்டதில் பின்வரும் 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | விபரம் | கோதா விலாஸ் ஆப்செட் | நியூராஜா பிரிண்டர்ஸ் | ஆர்.ஆர். பிரிண்டர்ஸ் |
|---|---|---|---|---|
| 1 | இக்கட்டிடத்தில் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. | | | |
| | a) ஸ்டிக்கர் சைஸ் 3 ½ x 6 inch / 9x15 cm (மல்டி கலர் பிரிண்டிங்) Nos 5000 | 23000 | 25500 | 26000 |
| | b) நோட்டீஸ் ஒரு கவர் பிரிண்டிங் 7 ½ x 10 inch – 19x25 Nos 5000 | 6750 | 7500 | 8000 |
| 2 | இக்கட்டிடத்தில் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. | | | |
| | a) ஸ்டிக்கர் சைஸ் 3 ½ x 6 inch / 9x15 cm (மல்டி கலர் பிரிண்டிங்) Nos 5000 | 23000 | 25500 | 26000 |
| | b) நோட்டீஸ் ஒரு கவர் பிரிண்டிங் 7 ½ x 10 inch – 19x25 Nos 5000 | 6750 | 7500 | 8000 |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கோதா விலாஸ் ஆப்செட் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 3961/2019/F1

**பொருள் எண் : 229**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் 2 KVA UPS மூலம் 5 கணிணிகள், ஆணையாளர் அறை , கணிணி மற்றும் வருவாய் பிரிவில் உள்ள கணிணி ஆகிய 7 கணிணிகள் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது 2 KVA UPS மற்றும் 10 எண்ணம் பேட்டரிகள் பழுது நீக்கம் செய்து தொடர்ந்து இயக்க முடியாத அளவிற்கு பழுதடைந்து விட்டது. எனவே பழுதடைந்த 2 KVA UPS மற்றும் 10 எண்ணம் பேட்டரிகள் மாற்றி, புதியதாக 5 KVA UPS மற்றும் 10 எண்ணம் பேட்டரிகள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.2,00,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 5251/2019/E1

**பொருள் எண் : 230**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கீழ்வரும் பிரிவுகளில் கணிணி பயன்படுத்தும் மேஜை நாற்காலிகள் சேதமடைந்து விட்டது.

| | |
|---|---|
| நகர் நலப்பிரிவு | மேஜை 1 எண்ணம் |
| காசாளர் | மேஜை 1 எண்ணம் |
| உதவி திட்ட அமைப்பாளர் | ரோலிங் நாற்காலி 1 எண்ணம் |
| வரி வசூல் மையம் | நாற்காலிகள் 2 எண்ணம் |

மேற்படி மரதளவாடச் சாமன்களை அரசு அங்கீகாரம் பெற்ற இராமநாதபுரம் மாவட்ட சர்வோதயா சங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திடம் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.22,100/- நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 5252/2019/E1

**பொருள் எண் : 231**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கணிணி பிரிவில் இ மெயில் எடுப்பதற்கும், வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கு கேட்பு அறிவிப்பு பிரிண்ட் எடுப்பதற்கும், குடிநீர் பிரிவில் கேட்பு அறிவிப்பு, குடிநீர் புதிய இணைப்பு வழங்க வேலை உத்திரவு எடுப்பதற்கும் பொது பிரிவில் சம்பள பட்டியல் மற்றும் இதர அன்றாட பணிகளுக்கு பிரிண்ட் எடுப்பதற்கு ஆக மொத்தம் 3 எண்ணம் பிரிண்டர்கள் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து வாங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.60,000/ நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 5250/2019/E1

**பொருள் எண் : 232**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 45 KVA திறன் கொண்ட ஜெனரேட்டர் அலுவலக பயன்பாட்டிற்கு கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன் வாங்கப்பட்டு அவ்வப்போது ஏற்படும் மின் தடையின் போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி ஜெனரேட்டர் நகராட்சி அலுவலக வடக்குப் பக்கம் உள்ள தரைமட்டத் தொட்டியில் தாமிரபரணி கூட்டு குடிநீரை மேல்நிலை நீர்த் தொட்டிக்கு நீரேற்றம் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தாமிரபரணி கூட்டு குடிநீரை இயக்கப் பயன்படுத்த 55 HP திறன் கொண்ட மின் மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு வருவதால் மின் தடை நேரங்களில் ஒரே நேரத்தில் நகராட்சி அலுவலகம் மற்றும் மின் மோட்டார்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை நிறுத்தி விட்டு ஜெனரேட்டர் இயக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அந்நேரங்களில் நகராட்சியில் அலுவல் பணிகள் பாதிக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ஜெனரேட்டரை நகராட்சி அலுவலகத்தின் பயன்பாட்டிற்கு பயன்படுத்திக் கொண்டு மின் தடை நேரங்களில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் வரப்பெறும் குடிநீரை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்ய 125 KVA திறன் கொண்ட புதிய ஜெனரேட்டர் வாங்க உத்தேச செலவினம் ரூ.12.00 இலட்சம் குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2019/E2

**பொருள் எண் : 233**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் நுழைவுவாயிலில் அமைந்துள்ள சிறுபாலம் சேதமடைந்துள்ளதால் வடிகாலின் வழியாக கழிவு நீர் செல்லாமல் சுகாதாரக் கேடு ஏற்பட்டு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள சிறு பாலத்தை இடித்து அப்புறப்படுத்தி புதிய சிறுபாலம் உயர்த்தி கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,65,000/- ஐ நகராட்சி பொது நிதியின் 2019-20 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2019/E1

<u>பொருள் எண் : 234</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மத்திய, மாநில அரசுகள் மற்றும் தனியார்களுக்கு பாத்தியப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிலப்பகுதிகளில் வைக்கப்படும் விளம்பரப்பலகை, விளம்பரப்பலகை அல்லாத விளம்பரங்கள் (தட்டிகள், பேனர்கள், சுவர் விளம்பரங்கள்) ஆகியவற்றிற்கு கீழ்க்கண்ட விபரப்படி விளம்பரப்பலகைகள் அனுமதி விளம்பரவரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003, பிரிவு 14(1), 14(2) அரசு ஆணை எண் 47 (தேர்தல்) நகராட்சி நிர்ணயம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.06.2003 தமிழ்நாடு அரசிதழ் எண் 184 பாகம் எண் III பிரிவு எண் 1 (a) நாள் 26.06.2003ல் G.O.No: 16 MAWS, 31.01.2019 ல் தமிழ்நாடு அரசிதழ் எண் 39 III பிரிவு / எண் (a) நாள் 31.01.2019ல் அரசு கீழ்க்கண்ட விபரப்படி நகரில் உள்ள முக்கிய இடங்கள், முக்கிய சாலைகள், தெருக்கள், இதரப்பகுதிகள் ஆகிய இடங்களில் அமையும் விளம்பரத்திற்கு தக்கவாறும், இடத்திற்கு தக்கவாறும், அளவுகளுக்கு தக்கவாறும் அந்த விளம்பர பலகை அமையும் சாலையின் அகலத்திற்கு தக்கவாறும் வைக்கப்படும் விளம்பரப்பலகைகள் மற்றும் விளம்பரபலகை அல்லாத விளம்பரங்களுக்கு (தட்டிகள், பேனர்கள், சுவர் விளம்பரங்கள்) விண்ணப்பக் கட்டணம், வருட நில வாடகை, மற்றும் உரிமையாணைக் கட்டணம் ஆகியன அரசு தெரிவித்துள்ள கட்டண விகிதங்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்ய மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

## <u>ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதிகள்</u>

அ) விதி 6-ல் துணை விதி(i)- ன் படி விளம்பரப்பலகைகள் நிறுவுதல் அதிகபட்ச அளவுகளுக்கான அட்டவணை கீழ்க்கண்டுள்ளவாறு:-

| வ.எண் | சாலை அகலம் / சாலை பாதைகள் | அதிகபட்ச அளவு | சாலைகள் சந்திப்பிலிருந்து நிறுவுதல் தூரம் |
|---|---|---|---|
| 1 | எந்த ஒரு சாலையில் உள்ள கடைகள் | 3 அடி கடைகளின் அகலம் | பொருந்தாது |
| 2 | 50’ அடி / 4 பாதைகள் | 20’ x 10’ அடி | 100 மீட்டர் |
| 3 | 80’ அடி / 6 பாதைகள் | 30’ x 15’ அடி | 100 மீட்டர் |
| 4 | 120 அடி / அதற்கு மேலும் | 40அடி x 20 அடி | 100 மீட்டர் |

ஆ) விளம்பர பலகை உரிமம் வழங்க மறுக்கப்படும் பட்சத்தில் அரசிற்கு மேல்முறையீடு செய்ய மற்றும் உரிமம் புதுப்பிக்க விதி எண்: 11ன் படி கட்டணம் ரூ 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்).

இ) புதிதாக சேர்க்கப்பட்டுள்ள விதி எண்: 12 துணை விதி (i) ன் படி உரிமம் வழங்க மற்றும் புதுப்பிக்க விண்ணப்ப படிவம் கட்டணம் ரூ1000/- ((ரூபாய் ஆயிரம் மட்டும்).

ஈ) விதி எண்: 4ல் உரிமம் வழங்கும் கால 31வது நாள் மார்ச் மூன்றாவது வருடம் என்பதை 3 வருடங்கள் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

உ) விதி எண்: 13ன் படி விளம்பர பலகைகள் நிறுவுதல் உரிமக்கட்டணம்.

1) இராமகிருஷ்ணாபுரம் பைபாஸ் ரோடு
2) மதுரை ரோடு
3) இராஜபாளையம் ரோடு
4) இராஜபாளையம் பைபாஸ் ரோடு
5) கீழரத வீதி
6) தெற்கு ரத வீதி
7) மேலரத வீதி
8) வடக்கு ரத வீதி
9) இராஜாஜி ரோடு (சாத்தூர் ரோடு)
10) டி.டி.ரோடு
11) பேருந்து நிலையம்
12) நேதாஜி ரோடு

நகராட்சி மற்றும் மத்திய மாநில அரசிற்கு சொந்தமான சாலைகளில் விளம்பரபலகைகள் நிறுவ உரிமக்கட்டணம் ச.மீ ஒன்றிற்கு ரூ6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்)

நகரில் உள்ள இதர சாலைகள் மற்றும் தெருக்களில் விளம்பர பலகைகள் நிறுவ உரிமக்கட்டணம் ச.மீ ஒன்றிற்கு ரூ4000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்)

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட நகராட்சிகள் சொந்தமான பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், சந்தைகள் திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள், இதரகட்டிடங்கள் மற்றும் நகராட்சி நிலங்கள் ஆகிய பகுதிகளில் நிறுவப்படும் விளம்பரபலகை அமையும் பரப்பளவிற்கு ஏற்றவாறு ஒரு ச.மீட்டருக்கு ஒரு வருடத்திற்கு நிலவாடகை நிர்ணயம் செய்ய மேற்கண்ட விதிகள் 2003 பிரிவு 7(2) கீழ் நகர்மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் நகராட்சிக்குச் சொந்தமான நிலம் விளம்பர பலகைகள் நிறுவுவதற்கு நிலவாடகை ஒரு சதுர மீட்டருக்கு ஒரு ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம். ஒரு சதுர மீட்டர் / ஒரு ஆண்டிற்கு நில வாடகை ரூ100/-.

**அலுவலகக்குறிப்பு**

அ) அரசாணை ( நாற்பது ஆண்டுகள்) எண் 2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( எம்–சி1), நாள் 05.06.2018, அரசு ஆணை எண் 15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்–சி1) நாள் 30.01.2019 & நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 17, நாள் 31.01.2019ல் வழங்கப்பட்டு உள்ள அறிவுரைகளின் படி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் உரிமம் வழங்குதல் கட்டணம், விண்ணப்பக்கட்டணம், புதுப்பித்தல் கட்டணம் மற்றும் வருடாந்திர வாடகை வசூல் செய்தல் சம்பந்தமாக திருத்தப்பட்ட விதிகளின் படி மேற்காண் பொருளில் கண்டவாறு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதிகளில் வைக்கப்படு விளம்பர பலகைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட திருத்திய கட்டணங்களை 01.02.2019 முதல் முன்தேதியிட்டு வசூல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ மேற்கண்ட கட்டண விபரங்களை தினநாளிதழ் மற்றும் அரசிதழில் பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்ய ஆகும் செலவுத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

***அலுவலகக்குறிப்பு :-*** *மன்றம் அனுமதிக்கலாம்.*
*ந.க.எண் 2203/2018/E1*

**<u>பொருள் எண் : 235</u>**

இந்நகராட்சிக்கு சேவை மற்றும் சரக்கு வரிக்கு ( GST ) பதிவு எண் வாங்கியதற்கும், வருமான வரி மற்றும் ( GST ) பதிவு செய்து ஒப்பந்ததாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு சான்று வாங்கியதற்கும் திரு. A. சரவணன் என்பவர் ரூ.10,500/ பட்டியல் கொடுத்துள்ளார். மேற்படி தொகையினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

***அலுவலகக்குறிப்பு :-*** *மன்றம் அனுமதிக்கலாம்.*

**<u>பொருள் எண் : 236</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மருத்துவர் காலனியில் நுண் உரக்குடில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி நுண் உரக்குடில் அமைந்துள்ள இடத்திற்கு செல்லும் செண்பகதோப்பு சாலையிலிருந்து சுமார் 280 மீட்டர் நீளத்திற்கு மண் சாலையாகவும், மேடுபள்ளமாகவும் இருப்பதால் மில் கலத்தால் இயங்கும் வாகனம் ( BOV ) செல்ல இயலவில்லை. மேலும் நுண் உரக்குடில் பணியின் மதிப்பீட்டில் சாலை வசதிக்கு வழிவகை செய்யப்படாததால் புதிய அணுகு சாலை அமைக்க வேண்டிய அவசியமாகிறது. எனவே மின் கலத்தால் இயங்கும் வாகனம் ( BOV ) செல்லுவதற்கு ஏற்றவாறு மேற்படி நுண் உரக்குடில் அமைந்துள்ள இடத்திற்கு செல்லும் செண்பகதோப்பு சாலையில் இருந்து சுமார் 280 மீட்டர் நீளத்திற்கு புதியதாக பேவர் பிளாக் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.14,00,000/ ஐ நகராட்சி பொது நிதியின் 2019-20 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***அலுவலகக்குறிப்பு :-*** *மன்றம் அனுமதிக்கலாம்.*
*ந.க.எண்* 2019/E1

ம. தீ. எண்                    நாள்

( ஒப்பம் ) கா. சுப்பையா,
தனி அலுவலர்,
/ உண்மை நகல் /

மேலாளர்